1990 சனவரி 23]

வினாக்கள் *3125, 3248, 3776, 3794, 4192* ஆகியவை ஒரே பொருள் தொடர்புடையனவாக இருப்பதால் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஒரேயடியில் அவற்றுக்கான விடைகளை அளித்து விடலாம்.

கால்நடை மருத்துவமனைகள்

**3125* திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் கால் நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த வட்டத்தில் அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**3248* திரு. ஆ. பாலையா ;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

குளச்சல் நகர[மன்ற பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்மிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளச்சல் நகர் மன்றப்பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியமில்லை.

**3776* திரு. மு. முகம்மது சித்திக் ;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பூம்புகார் தொகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் தொகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

*3794—திரு. எல். மூக்கையா;

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள லட்சுமிபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் 1989–90ல் லட்சுமிபுரம் உட்பட 10 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

*4192 திரு. கா. அண்ணாதுரை :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் நாட்டுச்சாலை கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

10–10 மணி

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனை கட்டுகிற எண்ணம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவமனை கட்டுவது குறித்து பரிசீலனையில் இருக்கிறதா

1990 சனவரி 23]

என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். எந்த இடத்தில், எங்கு அமைக்க விரும்புகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குத் தக்கப் பதில் அளிக்க இயலும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களே கேள்வி எழுப்பியிருக்கிறார். கேள்விக்கான பதிலை ஆற அமர எழுதிக் கொடுக்கலாம்.

திரு. ஆ. பாலையா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகரமன்றப் பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைக்க சாத்தியம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குளச்சல் நகரசபையைப் பொறுத்தவரையில் ஏராளமான கால்நடைகளை 5—6 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் வரை கொண்டு சென்று மருத்துவம் செய்யும் நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சரின் பதிலை மாற்றி. குளச்சலில் கால்நடை மருத்துவமனையை அமைக்க சாத்திய கூறுகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை உடனடியாகத் தொடங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகரசபை எல்லைக்குள் கால்நடை மருத்துவமனை அமைக்கத் தேவை யான கருத்துருவை அரசுக்குச் சமர்ப்பிக்க நடைமுறை விதி களுக்கேற்ப அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிற வகையில், உரிய தீர்மானங்களுடன் மூல அறிக்கை குளச்சல் நகராட்சி ஆணையரிடமிருந்து கோரப்பட்டதற்கு, அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்படாத நிலையில் அரசு நிலம் வாங்கி அல்லது ஆர்ஜிதம் செய்து கால்நடை மருந்தகம் அமைக்கும் படி கோரி குளச்சல் நகராட்சி மன்றம் தீர்மானம் நிறை வேற்றியுள்ளதால், இப்போது பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். முகம்மது சித்திக்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய கால்நடை மருத்துவமனை ஏற் படுத்துவதற்கு அரசு என்னென்ன தகுதிகளை எதிர்பார்க் கிறது? எந்த அடிப்படையில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் இது குறித்து விளக்கி இருக்கிறேன். இருப்பினும் தற்சமயம் அந்த நிபந்தனைகளை இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன். ஒரு இடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்

றால் தேவையின் அடிப்படையில், அங்கே இருக்கிற கால் நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப அந்த இடத்தில் கால்நடை மருந்தகம் அமைவதற்காக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றமும், ஊராட்சி ஒன்றியமும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டும். அதோடு அரசாங்கத்தின் மூலமாக ஒரு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. அதை நிறைவேற்றுகிற வகையில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்ப வேண்டும். அதாவது ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஒப்புதல் தீர்மானம்; ஒரு ஏக்கருக்கு குறையாமல் இடம் வழங்குகின்ற தீர்மானம் : நிரந்தரமான கட்டிடம் அமைகிற வரையில் வாடகை இல்லாமல் அந்த ஊரில் ஒரு கட்டிடத் திற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும், அந்த வகையில் கட்டிடம் கட்டுவதற்கு ஆகின்ற செலவில், அது முதல் கால் நடை மருந்தகமாக இருந்தால் 25 விழுக்காடும், இரண்டாவது கால்நடை மருந்தகமாக இருந்தால் 50 விழுக்காடும், மூன் றாவது கால்நடை மருந்தகமாக இருந்தால் 75 விழுக்காடும், நான்காவது கால்நடை மருந்தகமாக இருந்தால் 100 விழுக் காடும் அந்த ஊராட்சி ஒன்றியமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு தீர்மானம் : இப்படிப்பட்ட தீர் மானங்களை நிறைவேற்றி அனுப்பி வைத்தால் அதற்குப் பிறகு அரசாங்கத்தின் நிதி நிலைக்கேற்ப, தேவைக்கேற்ப அங்கே இருக்கிற கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப அது பரிசீலனை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-15 மணி

திரு. எல். மூக்கையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் லட்சுமி புரம் ஊராட்சிப் பகுதி மக்கள் கால்நடை வளர்ப்பதையே முக்கிய தொழிலாகக்கொண்டு வாழ்கின்ற மக்கள். அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறை வேற்றுகிற வகையில் இன்றைய தினம் இந்த அரசு அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு அனுமதி வழங்கியமைக்காக லட்சுமிபுரம் ஊராட்சிப் பகுதியில் இருக்கக் கூடிய அனைத்து மக்களும் இந்த அரசைப் பாராட்டிக் கொண் டிருக்கிறார்கள். எனவே அந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினராகிய நான் லட்சுமிபுரம் ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு அனுமதி அளித்த நமது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர் களே, கேள்வி நேரத்தில் தரப்படுகின்ற பதிலையொட்டி ஆளும் கட்சியிலிருந்தும் சரி, எதிர்க்கட்சியிலிருந்தும் சரி

1990 சனவரி 23]

கடந்த சில நாட்களாக நன்றி கூறுகிற ஒரு கடமையைச் செய்து வருகிறார்கள். அது கேள்வி நேரத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. நன்றியை ஏற்றுக்கொள்கிறோம் என்றாலும் அந்த முறை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. நன்றியைத் தனியாகவோ அல்லது கடிதம் மூல மாகவோ அல்லது வேறு ஒரு சந்தர்ப்பத்திலோ பேசும் போது குறிப்பிடுவதுதான் சாலச் சிறப்புடையதாக இருக்கும். கேள்வி நேரத்தில் கேள்வி கேட்பதுபோல் எழுந்து நன்றி தெரி வித்துக் கொள்வது ஒரு கேள்வியாக ஆகிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. அண்ணாதுரை ; பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட இந்த நாட்டுச்சாலை என்கிற கிராமம் பட்டுக்கோட்டையிலே இருந்து 6 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள ஒரு கிராமம். அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏறத்தாழ 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப் பதாகக் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் இந்த ஊரில் இந்தக் கால்நடை மருந்தகம் அமைப்பதற்குத் தேவையான இடத்தை இப்போதே இலவசமாக வழங்கி இருக்கிறார்கள். தேவையான கட்டிடம் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசிலனை செய்து இந்த ஊரில் மருந்தகம் அமைக்க முன் வருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசின் 'கோஸ்டல் டெவலப்மென்ட் ஏரியா' என்ற திட்டத்தின் கீழ் கிராம கேந்திர திட்டத்தின் அடிப்படையில் இந்த ஊரில் மருந்தகம் அமைப்பதற்குப் பரிந்துரை செய்யப்பட்டு சென்னையில் இருக்கக்கூடிய இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுச்சாலை என்ற கிராமம் பட்டுக்கோட்டை — மதுக்கூர் சாலையில் பட்டுக்கோட்டையிலிருந்து 6-வது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அங்கிருந்து மதுக்கூர் 5-வது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் அதிராம்பட்டினம், தம்பிக் கோட்டை, மேலக்காடு ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குள் பட்டுக்கோட்டை கால்நடை மருத்துவ மனை செயல்பட்டு வருகிறது. எனவே நாட்டுச்சாலைக்கு அருகாமையில் பட்டுக்கோட்டையில் 6-வது கிலோ மீட்டரில் கால்நடை மருத்துவமனையும், 5-வது கிலோ மீட்டரில் உள்ள மதுக்கூரிலே ஒரு கால்நடை மருந்தகமும், அருகா

மையில் காசாங்காடு கிராமத்திலே 4-வது கிலோ மீட்டரில் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. இவையன்றி பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கத்தினுடைய நிதி நிலைக்கேற்ப தேவையை அடிப்படையாகக் கொண்டுதான் கால்நடை மருந்தகம் அமைக்க இயலுமே தவிர எங்கெல்லாம் நாம் விரும்புகிறோமோ அங்கெல்லாம் அவற்றை அமைக்கிற சூழ்நிலை ஏற்பட்டால் உண்மையான தேவையை நாம் பூர்த்தி செய்ய இயலாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே வரும் காலங்களில் இது போன்ற நாட்டுச்சாலை கிராமத்தில் கால்நடை மருந்தகம் உண்மையிலேயே தேவை ஏற்படுமானால் அந்த நேரத்தில் அது குறித்து பரிசீலனை செய்வோம் என்ற பதிலை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

10-20 மணி

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

அவையில் செயல்படும் ஒரு கட்சி குறித்து.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற தமிழ்நாடு ஜனதா கட்சிக்கும் ஜனதா. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே 'Point of order' வராது.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசலாம்.